**<u>O.S.No.55/2021</u>**

<u>வா.சா.01, திரு. ராமமூர்த்தி</u>
நாள் : 07.01.2025 நேரம் : 01.03P.M.

**<u>சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியப் பிரமாணம் செய்யப்பட்டு பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்</u>**

1)தாவா சொத்து எனக்கு பாத்தியப்பட்டது என்று விளம்ப கோரி வழக்கு தாக்கல் செய்துள்ளேன். மொத்தம் 3 லக்க சொத்திற்கு வழக்கு தாக்கல் செய்துள்ளேன். சர்வே எண்.197/7, சர்வே எண்.197/8 மற்றும் சர்வே எண்.162/1 ஆகும். தாவா சொத்துக்களின் விஸ்தீரணம், நான்குமால்கள் என்னால் கூறமுடியாது எனக்கு ஞாபகம் இல்லை. இவ்வழக்கின் 1ம் பிரதிவாதி எனது மகள் ஆவார். 2ம் பிரதிவாதி 1ம் பிரதிவாதியின் பெரியம்மா ஆவார். 1ம் பிரதிவாதி எனது முதல் மனைவியான காந்தியம்மாள் என்பவருக்கு பிறந்த மகள் ஆவார். காந்தியம்மாள் இரண்டு வருடங்களுக்கு முன்பாக இறந்துவிட்டார். நானும், காந்தியம்மாளும் 1983ம் வருடம் காதல் திருமணம் செய்துகொண்டோம்.

2)எனக்கும், காந்தியம்மாளுக்கும் 1ம் பிரதிவாதியும், சரவணன் என்ற ஆண் குழந்தையும் பிறந்தார்கள் என்றால் சரிதான். சரவணன் தற்போது மன நிலை சரியில்லாமல் இருக்கிறார் என்றால் சரிதான். நான் எனது அக்கா மகள் மாரியம்மாளை 1996ம் வருடம் இரண்டாவது திருமணம் செய்துகொண்டேன் என்றால் சரிதான். அந்த நேரம் 1ம் பிரதிவாதிக்கு 10 வயது என்றாலும், சரவணனுக்கு 12 வயது என்று சொன்னாலும் சரிதான். நான் முதல் மனைவியான காந்தியம்மாளுக்கு சட்டப்படி விவாகரத்து பெற்றேனா என்றால் இல்லை ஊர் பஞ்சாயத்தில் பேசி தீர்த்துவிட்டார்கள். தற்போது பஞ்சாயத்து செய்தவர்கள் யாரும் உயிருடன் இல்லாததால் நான் யாரையும் சாட்சியாக விசாரிக்க தயாராக இல்லை.

3)பெருமாள்கோவில் கிராமத்தில் நாடார் சமுதாயத்தினர் மட்டும் தான் இருக்கிறார்கள் என்றால் சரிதான். தற்போது மேற்படி கிராமத் தலைவராக முத்துராமுசாமி உள்ளார் என்றால் சரிதான். அவருக்கு தற்போது 90 வயதாகிறது.

எனக்கும் 2ம் மனைவியான மாரியம்மாளுக்கும் பெருமாள்கோவில் கிராமத்தில் உள்ள எனது வீட்டில் திருமணம் நடைபெற்றது. எனக்கும் 2ம் மனைவியான மாரியம்மாளுக்கும் ஆதார் அட்டை காரைக்குடியில் உள்ளது என்றால் சரியல்ல. பெருமாள்கோவில் கிராம விலாசத்தில் தான் உள்ளது. 2வது மனைவிக்கு பிறந்த மகன்கள் காரைக்குடியில் தான் படித்து வருகிறார்கள் என்றால் சரிதான். 2ம் பிரதிவாதி தாக்கல் செய்துள்ள எதிர் வழக்குரையை நான் படித்து பார்க்கவில்லை.

4)எனது முதல் மனைவி காந்தியம்மாள் 1996ம் வருடம் பரமக்குடி நீதித்துறை நடுவர் நீதிமன்றத்தில் ஜீவனாம்ச வழக்கு எண்.06/96 என்ற வழக்கு தாக்கல் செய்து நான் குடியிருந்து வந்த காரைக்குடி விலாசத்திற்கு அழைப்பாணை சார்பு செய்யப்பட்டு நான் வழக்கறிஞர் திரு.அன்பழகன் மூலம் ஆஜரானேன் என்றால் சரியல்ல. மேற்படி வழக்கில் 30.06.1997ம் தேதி எனக்கு எதிராக உத்தரவாகியுள்ளது என்றால் சரியல்ல. நான் யாருக்கும் தெரியாமல் 2ம் மனைவியை திருமணம் செய்தது தொடர்பாக பெருமாள்கோவில் கிராமத்தில் ஊர் கூட்டம் நடைபெற்றது என்றால் சரியல்ல. அந்த ஊர் கூட்டத்தில் நானும், எனது 2வது மனைவி மாரியம்மாளும் ஆஜராகி தாவா சொத்து எங்களுக்கு தேவையில்லை என்றும், எனது 1வது மனைவி காந்தியம்மாள் நகைகளை விற்று இடம் வாங்கியதால் சொத்துக்களை எனது 1வது மனைவி காந்தியம்மாள் மற்றும் 1ம் பிரதிவாதியான எனது மகளிடம் ஒப்படைத்துவிட்டு சென்றுவிட்டேன் என்று சொன்னால் சரியல்ல.

5)அது முதல் தாவா சொத்தை காந்தியம்மாளும், 1ம் பிரதிவாதி அனுபவம் செய்து வந்தார் என்றாலும், அதன் பின்பு 1ம் பிரதிவாதி திருமண செலவிற்காக 2ம் பிரதிவாதியிடம் காந்தியம்மாள் தாவா சொத்தை ஒத்தி வைத்துள்ளார் என்று சொன்னால் சரியல்ல. தாவா சொத்திற்கான அசல் கிரைய ஆவணம் எனது வசம் தான் உள்ளது. நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய தயாராக இருக்கிறேன். ஊர் பொது கூட்டத்தில் பஞ்சாயத்து பேசும் போது அசல் ஆவணத்தை எனது 1வது மனைவி காந்தியம்மாள் மற்றும் 1ம் பிரதிவாதிக்கு கொடுத்துவிட்டு நான் வழக்கிற்காக அசல் ஆவணம் எனது கைவசம் உள்ளது என்று பொய்யாக

சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. மேற்படி சங்கதியிலிருந்தே நான் பொய்யை திரித்து கூறும் நபர் என்று சொன்னால் சரியல்ல.

6)தாவா சொத்தில் நான் தான் விவசாயம் செய்து வருகிறேன் என்பதை காட்டுவதற்கு ஆவணம் உள்ளதா என்றால் இல்லை. வா.சா.ஆ.1 ஆவணத்தை நான் காரைக்குடியில் இருந்து வந்து நகல் எடுத்து தான் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. வா.சா.ஆ.5 ஆவணத்தின் படி பட்டா மாறுதலுக்காக 2021ம் வருடம் நான் தாக்கல் செய்துள்ளேன் என்று சொன்னால் சரிதான். என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.6 வது ஆவணம் எனது பெயரில் இல்லை என்று சொன்னால் சரிதான். இவ்வழக்கு ஆவணங்கள் அனைத்தும் பொய்யாக உற்பத்தி செய்யப்பட்டது என்று சொன்னால் சரியல்ல. 1ம் பிரதிவாதி 2021ம் ஆண்டுக்கு பிறகு என்மீது 10க்கும் மேற்பட்ட முறை பரமக்குடி தாலுகா காவல்நிலையத்தில் இச்சொத்துக்களை அனுபவம் செய்யவிடாமல் தடுப்பதாக சொல்லி புகார் மனு கொடுத்தாரா என்றால் அவர்களும் கொடுத்தார்கள், நானும் கொடுத்தேன்.

(பிரதிவாதிகள் தரப்பு கற்றறிந்த வழக்கறிஞரின் வேண்டுகோளின் குறுக்குவிசாரணை தொடர்ச்சி ஒத்தி வைக்கப்படுகிறது )

விசாரணை முடிவுற்ற நேரம்: 01.31 P.M

சாட்சியின் கையொப்பம்.